நகைகளுக்கு நம்பிக்கை நாணயம் மிக்க நிறுவனம்
கணேசர் நகையகம்
TP-024 22464

ஈழநாதம்
EELANATHAM
மக்கள் நாளிதழ்
பக்கங்கள் ~ 08
நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 04 | 18-03-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 28

### புலிகளின் கப்பல் மீதான தாக்குதல்

# கடற்படை, பாதுகாப்பு அமைச்சின் அறிக்கைகள் ஒன்றிற்கொன்று முரணானதாக உள்ளன!

## கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் வெளிப்பாடு



(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டமை தொடர்பாக யுத்த நிறுத்தக்கண்காணிப்புக்குழு விடுத்த அறிக்கையில் இருந்து, கப்பல் தாக்கப்பட்ட விவகாரத்தில் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கைக்கும் தாக்குதலை நடத்திய சயூரா யுத்தக் கப்பலில் இருந்த கடற்படையினர் தெரிவித்த கருத்துக்களுக்கும் இடையில் வேறுபாடுகள் இருந்ததை அறிய முடிந்துள்ளது.**

சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கியழிக்கப்பட்டமை தொடர்பான தமது அறிக்கையை நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில், மேற்படி சம்பவம் தொடர்பாக சிறிலங்கா அரசும் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளும் வெளியிட்டுள்ள

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பயணம் செய்த விமானம் மூன்று மணி நேரம் தாமதம்!

சிறிலங்கா ஏயர் லைன்ஸ் விமானத்தின் மூலம் ஜப்பான் சென்ற புலிகள் பிரதிநிதிகள் விமானத்தின் சக்கரத்திற்கு காற்றுப்போனதால் மூன்று மணி நேரம் தாமதமாக ஜப்பான் நெறிட்டா விமான நிலையத்தைச் சென்றடைந்துள்ளது.

இவர்கள் சென்ற விமானம் மாலைதீவில் தரையிறங்கிய வேளை விமானத்தின் சக்கரம் ஒன்று காற்றுப்போயிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து அதைச்சரிப்படுத்தி விமானம் புறப்பட மூன்று மணி நேரம் தாமதமாகிவிட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் நெறிட்டா விமான நிலையத்திலிருந்து நேற்று பிற்பகல் 6.00 மணிக்கு ஹைக்கோனிலுள்ள பிறின்ஸ் விடுதியை சென்றடைந்துள்ளனர்.

### சந்திப்பு

சிறிலங்கா பிரதிநிதிகளுக்கும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இன்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### வீரவணக்கம்

நேற்று தவறுதலான விபத்தில் போராளி ஒருவர் சாவடைந்தார்.

வீரவேங்கை கண்ணகி/ அமுதமொழி (சிங்கராசா சுயாதினி இல. 3 சாந்திவனம், நாச்சிக்குடா முழங்காவில்) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இம்மாவீரருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### - ஜப்பான் பேச்சுகள் இன்று ஆரம்பம் -

# புலிகளின் கப்பல் குறித்த விவகாரம் முதல் நாள் பேச்சில் முக்கிய இடம்

விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையே ஜப்பானில் நடைபெறவுள்ள ஆறாவது சுற்றுப் பேச்சுக்களின் முதலாவது நாளான இன்று புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட விவகாரம் முக்கிய இடத்தைப் பெறவுள்ளது.

இதுகுறித்து அரச தரப்புக்குத் தலைமை தாங்கிச் சென்றுள்ள அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவிக்கும் போது, இந்தச் சம்பவம் காரணமாக முறுகலான சூழ்நிலை உருவாகியுள்ளது. அந்த முறுகலை உடனடியாகத் தீர்ப்பது தான் நல்லது. அதை மூடி மறைப்பதில் பயனில்லை.

இந்த விவகாரம் குறித்து விவாதித்து ஒரு முடிவுக்கு வர முடியும் என்றே நான் கருதுகிறேன். அப்படிச் செய்தால் தான் அடுத்த மூன்று நாள் பேச்சுவார்த்தையின் போது முக்கியமான விடயங்கள் குறித்து

(8 ஆம் பக்கம் பார்க்க)



இன்று பேச்சுவார்த்தை நடைபெறவுள்ள பிறின்ஸ் விடுதி

## ஜப்பான் சிறப்புத்தூதுவர் தலைமையில் பேச்சுவார்த்தை

(லண்டன்)

ஜப்பானில் இன்று ஆரம்பமாகும் ஆறாவது சுற்றுப்பேச்சுவார்த்தையில் ஜப்பானின் சிறப்புத்தூதுவர் அகாஷி தலைமை தாங்குவார் என பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாங்கள் பேச்சுக்களின்போது பொருளாதார விவகாரங்கள் பற்றி விவாதிக்க இருக்கின்றோம். அதாவது, உடனடிப் புனர்வாழ்வு மற்றும் மனிதாபிமானத் தேவைகள் குறித்த துணைக்குழுவின் பணிகள் குறித்தும், இலங்கை முழுவதற்குமான மறுசீரமைப்பு குறித்தும் யூன் 9, 10ஆம் திகதிகளில் நடத்தப்படவிருக்கும் நிதி உதவி அளிக்கும் நாடுகளின் மாநாடு பற்றியும் பேசப்போகின்றோம்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தியாகி அன்னை பூபதியின் நினைவு நாட்கள் நாளை உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்

இந்திய வல்லாதிக்கத்திற்கு எதிராக உண்ணாநோன்பிருந்து ஈகச்சாவெய்திய தியாகி அன்னை பூபதியின் 15ஆம் ஆண்டு நினைவு தினங்கள் நாளை ஆரம்பமாகவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாளை காலை 9.30 மணிக்கு தேசியக் கொடியேற்றக்கூடிய இடங்களில் பொதுச் சுடரேற்றி, தேசியக் கொடியேற்றி திருவுருவப் படங்களுக்கு சுடரேற்றி மாலை அணிவித்து மலர்தூவி அகவணக்கம் செலுத்தி நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

நினைவு தினங்களான நாளை

(8 ஆம் பக்கம் பார்க்க)



## திருமலைக் கடற்பரப்பில் 3 விடுதலைப் புலிகள் கைது

திருகோணமலைக் கடற்பரப்பில் வைத்து மூன்று விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறிலங்கா பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றுக் காலை திருகோணமலைத் துறைமுக உயர் பாதுகாப்பு வலயத்தில் இவர்கள் பிரவேசித்ததாக குற்றம் சாட்டியே கைது செய்யப்பட்டனர்.

இவர்களை சிறிலங்கா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**உயர்கல்வி வாய்ப்பு**

கனடா நாட்டின் ரொறொன்ரோ நகரில் கம்பியூட்டர், முகாமைத்துவம் என்பவற்றில் உயர் கல்விக்கான வாய்ப்புக்கள்A/L.இல் சித்தி போதுமானது. விபரங்களுக்கு: 140 பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல. 2222478

(3026)

## மெய்வல்லுநர் திறனாய்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சிவபாதகலையகம் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு வித்தியாலய அதிபர் நடேசன் தம்பிராசா தலைமையில் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும். (பா)

# கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம் ஊடாக மாணவர்களுக்கு சீருடை வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கத்தின் தொழிற்பரப்பிற்குள் இயங்கும் 17 பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கப்படவுள்ளது. இதனைக் கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத்தின் ஊடாக வழங்குவதென கிளி/முல்லை மாவட்ட வலயக் கல்விப்பணிப்பாளர்கள், கரைச்சி உதவி அரசாங்க அதிபர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கிளி. மாவட்டம், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம் ஆகியோர் இணைந்து தீர்மானித்துள்ளனர். மேற்படி சீருடைவிநியோகம் கீழ்க்குறிப்பிடும் திகதிகளில் மு.ப 8.30 மணியிலிருந்து பி.ப 4.30 மணிவரையும் நடைபெறவுள்ளது. மேற்படி விநியோகம் முழுமையாக நடைபெறுவதற்கு அவ்வப் பகுதி பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், ஏனைய பொதுநலன் விரும்பும் அமைப்புக்களை ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

விபரம் வருமாறு:

நாளை, புதன்கிழமை

புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளி.மத்திய கல்லூரி, கிளி.மகா வித்தியாலயம், கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை, திருவையாறு மகா வித்தியாலயம்.

20ஆம் திகதி, வியாழக்கிழமை

கிளி.இந்துக் கல்லூரி, கிளி.இந்து ஆரம்ப பாடசாலை, கிளி.கனகபுரம் ம.வித்தியாலயம், கிளி.செல்வாநகர் அ.த.க.பாடசாலை, கிளி.புதுமுறிப்பு விக்னேஸ்வரா ம.வி:

21ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

கிளி.சிவபாதகலையகம் அ.த.க.பாடசாலை, கிளி.பாரதிபுரம் வித்தியாலயம், கிளி.சாந்தபுரம் அ.த.க.பாடசாலை, முல்லை. திருமுறிகண்டி அ.த.க.பாடசாலை.

24 ஆம் திகதி, திங்கட்கிழமை

புனிதபற்றிமா றோ.க. பாடசாலை, உருத்திரபுரம் மகா வித்தியாலயம், சிவநகர் அ.த.க.பாடசாலை. (சோ)

# சுகாதாரத் தொண்டர்களுக்கு உணவு வழங்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக கிளிநொச்சி மாவட்டத்தில் சேவையில் ஈடுபட்டுவரும் சுகாதாரத் தொண்டர்களுக்கு உலக உணவுத்திட்டத்தின், உணவுக்கான வேலைத்திட்டத்தின்கீழ் உணவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இது குறித்து கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் தெரிவிக்கையில், மேற்படி சுகாதாரத்தொண்டர்களுக்கு உணவு வழங்கத் தீர்மானிக்கப்பட்டு நாளை 19ஆம் திகதி பகல் 11.00 மணிக்கு கிளி.அரச செயலகத்தில் வைத்து உணவுப் பொதி வழங்கும் சம்பிரதாய பூர்வமான அடையாள ஆரம்ப நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் முதற்கட்டமாக 50 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அழைப்பிதழ்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அத்துடன் 25 கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (சோ)

## 'வரண கிரண' விஸ்தரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையினரின் 'வரணகிரண' நடவடிக்கை நெடுந்தீவு முதல் வாகரை வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்குகிழக்கு கடற்பகுதியில் விடுதலைப்புலிகளின் நடமாட்டங்களைத் தடுத்து நிறுத்தவே இந் நடவடிக்கை விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# முறைசாராக் கல்விப் பிரிவின் கணினிப் பயிற்சிநெறி

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளி. வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவினரால், இலவச கணினிப் பயிற்சிநெறி நடாத்த ஏற்பாடாகி உள்ளது.

இக்கணனி பயிற்சிநெறிக்குப் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ், ஆங்கில மொழி உட்பட 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமெனவும் இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 25.03.2003 ஆகும் எனவும் விண்ணப்பப்படிவங்களை கிளி. வலயக் கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாமெனவும் கிளி. வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் அவர்கள் தெரிவித்துள்ளார். (சோ)

# வேலைவாய்ப்புக்கான நேர்முகத் தேர்வு

கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள மாவீரர், போராளி குடும்பங்களைச் சார்ந்தவர்களிடமிருந்து பின்வரும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவைப்படுவதால் இவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 20, 21.03.2003 வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் காலை 10.00 மணி தொடக்கம் பகல் 2.00 மணி வரை கிளி/கனகபுரத்தில் அமைந்துள்ள மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பக நடுவப்பணியகத்தில் இடம்பெறவுள்ளதால், தகுதியானவர்கள் தங்களிடம் உள்ள தகுதிச் சான்றிதழ்களுடன் சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பணிநிலைகள்:-**

- ☐ கணக்காளர்கள்
- ☐ காவலாளிகள்
- ☐ சாரதிகள்
- ☐ சிற்றூழியர்கள்
- ☐ வாகன நடத்துநர்கள்
- ☐ சமையலாளர்கள்
- ☐ நாடகக் கலைஞர்கள்
- ☐ தட்டச்சாளர்கள் - தமிழ், ஆங்கிலம்

அத்தோடு கணக்கியல், லேத் வெல்டிங் போன்றவற்றை பயில விரும்புவர்களுக்கும், நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளதால் மேற்குறிப்பிட்ட திகதிகளில் சமூகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (ஆண்கள் மட்டும்)

☐ கணக்கியல் (கல்வித்தகைமை) க.பொ.த.( சா/தரம் )இவர்களுக்கு உணவு, தங்குமிட வசதி உட்பட பயிற்சிக் காலத்திற்கான கொடுப்பனவும் வழங்கப்படும்.

☐ லேத் வெல்டிங் (கல்வித்தகைமை) 10ஆம் ஆண்டு. இவர்களுக்கு உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்

தொழில் வங்கி,
மாவீரர், போராளி குடும்பநலன் காப்பகம்.
கனகபுரம், கிளிநொச்சி.

(3028)

## ராணுவப்பொருட்கள் மீட்பு

புத்தளம் முன்னாள் நகரசபைத் தலைவர் வாசஸ்தலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பல ராணுவச் சீருடைகள் மற்றும் முக்கிய படைத்தளபாடங்கள் சிறிலங்காப் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பாலாவி உப்பளம் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நீர் கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் பொலிசார் அளித்த தகவலையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நகரசபைத் தலைவர் தலைமறைவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# விமானக் குண்டுவீச்சில் பலியான மக்கள் நினைவாகத் தூபிதிறப்பு

1996 ஆம் ஆண்டு காந்திக் கிராமச் சந்தியில் சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலின் போது கொல்லப்பட்ட அப்பகுதி மக்களின் நினைவாக அதே இடத்தில் நேற்று நினைவுத்தூபி திரைநீக்கம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வு காலை 10 மணியளவில் கோணாவில் கிராம சேவையாளர் சி.சிவனேசன் தலைமையில் ஆரம்பமானது.

தேசியக்கொடியினை அக்கராயன் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் முடியரசன் ஏற்றி வைத்தார்.

நினைவுத் தூபியை அக்கராயன் பிரதேச ஊரகவளர்ச்சிப் பொறுப்பாளர் ஈழவன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து சிறப்புரை இடம்பெற்றது.

## கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

### சாரதி பதவிக்கான விண்ணப்பம் கோரல்

01. சம்பள குறியீட்டு இல :- 312 - 14
02. சம்பள அளவுத்திட்டம் :- 3750 - 70 x 10 - 75 x 10 - 5200/-
03. வயதெல்லை :- 18 - 45 (ஏற்கனவே கூட்டுறவில் பணிபுரிந்தவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது)
04. தகைமைகள் :- 05ம் வகுப்பு கல்விச் சான்றிதழுடன் பஸ்/லொறி/ட்ராக்டர் (பெட்டியுடன்) சாரதி அனுமதிப்பத்திரத்துடன் சாரதி தொழிலில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

மேற்காணும் தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்த படிவத்தின் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "சாரதி பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ "தலைவர், கிளி. ப.தெ.வ.அ.கூ.சங்கம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 27.03.2003 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகவோ அனுப்பி வைக்க வேண்டும். (சங்க எல்லைப்பரப்பிற்குள் வதிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

தலைவர்,
கிளி.ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
கிளிநொச்சி.

(சி-8019)

## NORTHERN TECHNOLOGY, KTPM Computer Training Centre ஆதரவில்

வன்னி கணினி பயிற்சி நிலையம் நடாத்தும் A/L மாணவர்களுக்கான இரசாயனவியல்

### முன்னோடிப்பரீட்சை

| பரீட்சை நடைபெறும் இடங்கள் | விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் இடங்கள் |
|---|---|
| 1. வவுனியா மாவட்டம் இறம்பைக்குளம் மகளிர் பாடசாலை. | வவுனியா KTPM கணினி நிறுவனம், இல:29, கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா. |
| 2. கிளிநொச்சி மாவட்டம் மத்திய மகா வித்தியாலயம் | கிளிநொச்சி வன்னி கணினிப் பயிற்சி நிலையம் டிப்போ றோட், கிளிநொச்சி |
| 3. யாழ். மாவட்டம் இல:20, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம NORTHERN TECHNOLOGY இல:20, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். |
| 4. முல்லைத்தீவு மாவட்டம் NITM கணினி நிறுவனம் மல்லாவி, புதுக்குடியிருப்பு | முல்லைத்தீவு NITM கணினி நிறுவனம் மல்லாவி, புதுக்குடியிருப்பு. |
| 5. மன்னார் மாவட்டம் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி | மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி |

விண்ணப்ப முடிவுத் திகதி-20.03.2003

குறிப்பு:- பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் கிடைக்கப் பெறாதவர்கள் விண்ணப்பப்படிவத்தின் தொடர் இலக்கத்தைக் கொண்டு பரீட்சை மண்டபத்திற்கு வரவும். இதுவே பரீட்சை சுட்டெண் ஆகும்.

(3027)

# ஈராக்கின் தன்னிச்சையான செயற்பாட்டை கட்டுப்படுத்த 4 நாடுகள் கூட்டு நடவடிக்கை

## -போர்த்துக்கல் உச்சி மாநாட்டில் தீர்மானம்.

**தன்னிச்சையான போக்கில் ஈராக்கை செயற்பட அனுமதிக்க முடியாது என அமெரிக்கா தலைமையிலான நான்கு நாடுகளின் உச்சிமாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு பயங்கரவாதத்திற்கு எதிராக சகல விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவும் இதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

பயங்கரவாதத்திற்கு எதிராக சகல விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் பயங்கரவாதத்தின் கோட்டையாக ஈராக் தொடர்ந்தும் இயங்குவதை எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாது எனவும் அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின், போர்த்துக்கல் நாட்டுத் தலைவர்களின் உச்சிமாநாட்டில் முடிவுவெடுக் கப்பட்டுள்ளது.

போர்த்துக்கல் பிரதமர் இந்த உச்சிமாநாட்டினை ஏற்பாடு செய்திருந்தார்.

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயர்,ஸ்பெயின் பிரதமர் ஆகியோர் ஈராக் விவகாரம் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

உச்சிமாநாடு இடம்பெற்ற பின்னர் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கருத்து வெளியிடுகையில், ஈராக் யுத்தம் தொடர்பான உடனடித் தீர்மானம் ஒன்றை உலகம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளார்.

ஆயினும் அவர் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தமக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கோரிக்கை எதனையும் விடுக்க வில்லை.

அதுமட்டுமன்றி பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் பற்றியும் அவர் எதுவும் பேசவில்லை.

ஈராக்கின் ஆயுதங்களைக் களைய முடியும் என்று நம்புகிறோம். பிரான்சின் எதிர்ப்புக் குறித்து ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

ஆயுதங்களைக் களைவதற்கான கடைசிச் சந்தர்ப்பத்தை சதாம் ஹுசைன் பயன்படுத்திக்கொள்ளாது விட்டால் 1441 ஆம் தீர்மானத்தின் படி, ஈராக் மீது இராணுவத் தாக்குதல் தொடுக்கும் அதிகாரம் உள் ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்..



குவைத்திலுள்ள விமானத் தளமொன்றில் நிறுத்திவைக் கப்பட்டுள்ள அமெரிக்க ஏ-10 விமானங்கள்.



ஈராக்கிய குர்திஸ்தான் சனநாயகக் கட்சியைச் சேர்ந்த விசேடபடைவீரர் ஒருவர் உருமறைப்புச் செய்து மரத்தின் பின்னால் மறைந்து அமர்ந்திருக்கிறார். இக்கட்சியைச் சேர்ந்த 3000 பேருக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.


# சிம்பாவ்வே மீது பொருளாதாரத்தடை நீடிப்புக்கு பொதுநலவாயம் வலியுறுத்து

சிம்பாவ்வே மீதான பொருளாதாரத் தடை குறைந்தது இன்னும் ஓராண்டாவது மேற்கொள்ளப்பட வேண்டும் என பொதுநலவாய அமைப்பு தீர்மா னித்துள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பொருளாதாரத்தடை இவ்வாண்டு டிசம்பர் வரையாவது தொடர வேண்டும் என்று பொதுநலவாய் அமைப்பு நேற்று முன்தினம் தெரிவித்தது சனாதிபதி ரொபேட்முகாபே அரசுக்கு எதிராகவே இந்த நடவ டிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.

வெள்ளை இனத்தவர்களின் காணிகள் கைப்பற்றப்பட்டமை தொடர்ந்தும் தேர்தல் பின் போடப் படுவது ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.



கின்னஸ் சாதனைப்புத்தகத்தில் இடம்பெறுவதற்காக ஜப்பானிலுள்ள யுர்னிவேசல் தியேட்டரில் மிகப்பெரிய பிஸ்கற் ஒன்று தயாரிக்கப்பட்டது. 3.5மீற்றர் விட்டத்தில் தயாரிக்கப்பட்ட இதன்நிறை 1200 கிலோவாகும்.

# பாகிஸ்தானுடன் யார் விரும்பினாலும் காஷ்மீர் விவகாரத்தைப் பேசமாட்டோம்

## -இந்தியா திட்டவட்டமாக அறிவிப்பு

(புதுடில்லி)

காஷ்மீர் பிரச் சினை குறித்து பாகிஸ்தானை பேச்சுக்களில் ஈடுபடுத்த எவர் விரும்பினாலும் அவர்களுடன் பேச்சுக்களை நடத்தப் போவதில்லை என்று இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பேச்சுக்கள் நடத்த விரும்பினால் முதலில் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி தெரி வித்துள்ளார்.



காஷ்மீரில் ரோந்துசெல்லும் இந்தியப் படையினர்

பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்டுள்ள அணுவாயுதங்கள் பயங்கரவாதிகளின் பாவனையில் இருப்பது தொடர்பாக அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளிடம் முறையிடப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்குதல் ஒன்பது இந்தியப் பொலிசார் பலி!

(புதுடில்லி)

இந்திய காஷ்மீர் பிரதேசத்தில் தீவிரவாதிகள் பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் ஒன்பது பொலிசார் பலியாகினர்.

ஜம்முவில் இருந்து 65 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருந்த பொலிஸ் நிலையம் ஒன்றின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் இரண்டு பொது மக்களும் பலியாகியுள்ளனர்.

இந்திய அரசின் ஆட்சியைப் புறந்தள்ளக் கோரும் இஸ்லாமிய தீவிரவாதிகளின் தாக்குதல் இதுவென இந்தியப்பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# 'தமிழ் முழக்கம்' ஆசிரியர் 'பொடோ' வின் கீழ் கைது

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து சென்னையில் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தார் என்று குற்றம் சாட்டி 'தமிழ் முழக்கம்' பத்திரிகையின் வெளியீட்டாளர் சாகுல் ஹமீத், 'பொடோ' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

'பொடோ' சட்டத்தின் கீழ் தமிழகத்தில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வை.கோ. உட்பட பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கபட்டுள்ளமை தெரிந்ததே.

இதேவேளை, 'பொடோ' சட்டத்தை எதிர்த்து திராவிட முன்னேற்றக்கழகம் எதிர்வரும் 29ஆம் திகதி தமிழகம் முழுவதும் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நான்கு பொலிசார் தாக்குதலில் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் நான்கு பொலிசார் உட்பட ஆறு பேர் பலியானதுடன் மேலும் 55 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படையினரை ஏற்றிவந்த வாகனம் ஒன்றை குறிவைத்தே தடை செய்யப்பட்ட 'உல்பா' தீவிரவாதிகள் இத்தாக்குதலை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

# டாக்கா அருகே படகு விபத்து பயணித்தோரைக் காணவில்லை!

(டாக்கா)

பங்களாதேஷில் நேற்று முன்தினம் இடம்பெற்ற படகு விபத்தொன்றில் பயணம் செய்த 35 பேரில் 34 பேர் காணாமல் போயினர். ஒருவரது சடலம் மீட்கப்பட்டது. டாக்காவில் இருந்து எழுபது மைல் தென்புறத்தே அமைந்திருக்கும் இடத்திலேயே இவ்விபத்து இடம்பெற்றது.

இப்படகு 150 பேரை ஏற்றிச் செல்லக் கூடியது. ஆனால் விபத்து இடம்பெற்ற வேளை 35 பேரே படகில் இருந்துள்ளனர்.

# குடும்ப நல சேவையாளர் பற்றாக்குறையால் பாதிப்புறும் தாய், சேய் நலன்கள்

வடக்கு-கிழக்கிலுள்ள மருத்துவமனைகள், சுகாதார வைத்திய பணிமனைகளில் ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக மருத்துவர் உட்பட முக்கிய பணியாளர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படாது வெற்றிடமாகவே இருந்து வருகின்றன.

இவற்றுள் குடும்பநல சேவையாளர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படாதுள்ளமையின் காரணமாக குறிப்பாக கிராமப்புறங்களில் வதியும் தாய், சேய்களின் நலப் பாதிப்புக்கள் வெகுவாகக் காணப்படுவதுடன் தாய், சேய்களின் மரண வீதமும் இப்பகுதிகளில் அதிகரித்தவண்ணமுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக, பின்தங்கிய அதாவது, அடிப்படை வசதிகள் குறைந்த கிராமப் புறங்களில் வதியும் கர்ப்பிணித்தாய் மார்கள் மற்றும் குழந்தைகளுக்கான சுகாதார ஆலோசனைகளை நல்கி அவர்களுடைய சுகாதாரக்குறைபாடுகளை இனங்கண்டு அதற்கான அறிவுறுத்தல்களை வழங்கி கர்ப்பிணித்தாய்மார்களையும் குழந்தைகளையும் சுகதேகிகளாகவும், ஆரோக்கியமுள்ளவர்களாகவும் ஆளாக்கும் பாரிய பொறுப்பு (பணி) இக்குடும்ப நல சேவையாளர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

**கனகபுரச் சோதி**

இந்நிலையில், வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் நியமிக்கப்பெற்று பணிபுரிந்து வரும் குடும்ப நலசேவையாளர்களின் ஆளணி வெகு குறைவாகவே காணப்படுகின்றது.

குறிப்பாக, இப்பிரதேசங்களில் 100க்கு 35 வீதத்திற்கும் குறைவான குடும்ப நல சேவையாளர்களே சேவை புரிந்து வருகின்றனர். இதன் காரணமாக ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது வடக்கு-கிழக்கில் உள்ள மாவட்டங்களில் தாய், சேய் மரண வீதம் அதிகரித்த வண்ணமுள்ளது.

இன்றைய நிலையில், மற்றைய மாவட்டங்களைவிட வடக்கு- கிழக்கு மாகாணத்தில் வதியும் தாய். சேய்களின் நிலைமை என்பது உன்னிப்பாகவும், மிகவும் அவதானத்துடனும் உற்றுநோக்க வேண்டியது ஒரு தலையாய கடமையாகும்.

ஏனெனில், இவர்கள் போர் அனர்த்தங்கள், பொருளாதாரம் ஆகியவற்றினால் வெகுவாகப் பாதிப்புற்றிருப்பவர்கள். இவர்கள் தற்போது ஒருவருட காலமாக ஒரு சிறு

> **இன்றைய நிலையில், மற்றைய மாவட்டங்களை விட வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வதியும் தாய், சேய்களின் நிலைமை என்பது உன்னிப்பாகவும், மிகவும் அவதானத்துடனும் உற்றுநோக்க வேண்டியது ஒரு தலையாய கடமையாகும்.**

சமூக காற்றை சுவாசித்து வருகின்ற பொழுதிலும், இவர்கள் தங்களது முன்னைய பாதிப்புக்களின் தாக்கத்திலிருந்து இன்னும் முற்று முழுதாக விடுவிக்கப்படவில்லையென்பது உண்மையே.

இந்நிலையினை, சீர்செய்வதாயின் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இலகுவானதும், சாத்தியப்படக்கூடியதும் என்னவெனில் சுகாதார அமைச்சு உடனடியாக குடும்ப நல சேவையாளர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கான பயிற்சியினை நல்கி இப்பகுதிகளுக்குத் தேவையான குடும்ப நல சேவையாளர்களை உருவாக்கி சேவையில் ஈடுபடுத்த முன்வரவேண்டும்.

இம்மாகாணத்தில் இக்கடமையிலீடுபடுவதற்கு 600 குடும்ப நல சேவையாளர்கள் தேவையாக உள்ளதாக சுகாதார குறிப்பேடுகள் தெரிவிக்கின்றன.

2002 ஆம் ஆண்டில் இம் மாகாணத்திற்குட்பட்ட மாவட்டங் களிலிருந்து குடும்ப நல சேவைக்கு விண்ணப்பங்களை சுகாதார அமைச்சு கோரியிருந்தது.

அதாவது பயிற்சித் தெரிவிற்கு க.பொ.த உயர்தர பிரிவில் சித்தியும் குறிப்பாக விஞ்ஞான பாடத்தில் திறமைச் சித்தியும் கோரப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் மேற்படி மாவட்டங்களிலிருந்து விண்ணப்பித்த 2500 விண்ணப்பதாரிகளில் 53 விண்ணப்பதாரிகளே தகைமையினைப் பெற்றிருந்தனர்.

600 குடும்ப நல சேவையாளர்கள் தேவைப்படுமிடத்து 53 பயிலுனர்களுக்கு பயிற்றுவிப்பதில் இவர்கள் மூலம் எவ்வித பலனும் இம்மாவட்ட தாய் சேயினருக்குக் கிட்டப் போவதில்லை.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் குடும்ப நல சேவையாளர்கள் மிகக் குறைவான அளவில் இருப்பதன் காரணமாக மேற்படி சேவையில் ஈடுபடுத்தும் பொருட்டு ஓய்வூதியம் பெற்றுச் சென்ற குடும்ப நல சேவையாளர்கள் உள்வாங்கப்பட்டு இப்பகுதிகளில் தற்போது சேவையில் ஈடுபட்டுவருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது. இந்நிலையிலேயே இம்மாகாணத்தில் இச்சேவை இடம் பெற்று வருகின்றமை குடும்ப நல சேவையாளர்களின் ஆளணிப்பற்றாக் குறையினை எடுத்தியம்புவதாக உள்ளது.

2002 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தற்போதைய சுகாதார அமைச்சர் தெரிவிக்கையில், மேற்படி குடும்பநல சேவை தேர்விற்கான தகைமையினை முன்னைய மாதிரி மேற்படிமாவட்டங்களில் செயற்படுத்தி க.பொ.த(சா/த)தில் (4 பாடங்களில் திறமைச் சித்தியுடன்) மேற்படி பயிற்சிக்கான தெரிவுகளை மேற்கொண்டு கூடிய ஆளணியினை உள்வாங்கி பயிற்றுவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். அதற்கான சிபார்சினையும் பாராளுமன்ற மந்திரிசபை உபகுழுவிடமும் கையளித்தார். ஆனால், மந்திரி சபை உபகுழு அதை ஏற்க மறுத்து விட்டது.

ஆனால், இம்மொழிவினை குடும்ப நல சேவையாளர்களின் தொழிற் சங்கங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன.

வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் தேவைக்கதிகமான குடும்ப நல சேவையாளர்கள் கடமை புரிந்து வருகையில், வடக்கு கிழக்கு பகுதிகளில் பற்றாக்குறை நிலையிலேயே குடும்ப நல சேவையாளர்கள் கடமை புரிந்து வருகின்றனர். இவர்களில் பலர் ஓய்வு பெறும் நிலைக்கும் ஆளாகியுள்ளனர்.

இந்நிலையில் 3 வருடங்களுக்காவது தாய், சேய்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு குடும்ப நல சேவைப்பயிற்சிக்கான தகைமையை தொழிற்சங்கங்கள் ஏற்றுக் கொண்டதற்கமைவாகமூன்று வருடங்களுக்கு முன் 4 சுகாதார அமைச்சு கோரியிருந்த தகைமையளவில் இம்மாவட்டங்களிற்குத் தேவையான கு.ந.சே ஆளணிகளை உள்வாங்க சுகாதார அமைச்சிற்கு அழுத்தம் கொடுத்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வதியும் தாய், சேய்களின் நலனைக் காப்பாற்ற சகல அரச, அரச சார்பற்ற, துறை சார்ந்த நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சுகாதாரத் திணைக்களங்கள் உடன் முன்வர வேண்டும் எனக் கோரப்பட்டு வருகின்றது. அப்பொழுதே இம்மாகாணத்தில் தாய், சேய்களை மரண அவலத்திலிருந்து காப்பாற்றமுடியும். □

---

# வெளிநாட்டு மருத்துவ நிபுணர் குழுவின் இலவச மருத்துவ முகாம்

(நமது செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் வெளிநாட்டிலிருந்து வருகை தரவிருக்கும் மருத்துவ நிபுணர் குழுவினரால் இலவச மருத்துவ ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளன.

இன்று முதல் எதிர்வரும் 21ஆம் திகதி வரையான நாட்களில் காலை 8. 00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணிவரை இவை நடைபெறவுள்ளன.

மேலும், சத்திர சிகிச்சை, குழந்தைகள் மருத்துவம், மகப்பேற்று மருத்துவம், பெண் ஆரோக்கிய மருத்துவம், பொது மருத்துவம், நரம்பியல் மருத்துவம், மனநோய் மருத்துவம், உளவள சிகிச்சை, பற்சிகிச்சை என்பன இதன்போது இடம்பெறவிருப்பதாகவும், பயன்பெறவிரும்புவோர் குறிப்பிட்ட தினங்களில் மருத்துவமனை வெளிநோயாளர் பகுதிக்கு வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது..

---

-சிறிலங்கா விமானப் படையினரால்-

# கொல்லப்பட்டோர் நினைவாக புளியம் பொக்கணையில் தூபி

( கண்டாவளை)

விசுவமடுப் பிரதேசத்தில் பழைய வட்டக்கச்சி, கண்டாவளை, புளியம்பொக்கணைக் கிராமங்களில் 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறிலங்கா விமானப் படையின் கிபிர் குண்டுவீச்சு விமானத் தாக்குதல்களில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் நினைவாக நினைவுத்தூபி புளியம்பொக்கணைச் சந்திப்பகுதியில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் பி.ப 4.00 மணிக்கு பெரியகுளம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் க.மாணிக்கராசா தலைமையில் நடைபெற்றது.

தமிழீழ தேசியக் கொடியை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன் ஏற்றினார்.பொதுச்சுடரினை தருமபுரம் மேற்கு கிராம சேவகர், திருமதி இராஜலட்சுமி சிவராசா ஏற்றினார். நினைவுத் தூபி அடிக்கல்லை விசுவமடு பிரதேச தமிழர் எழுச்சிப்பேரவைப் பொருளாளர், சி.தணிகாசலம் பெரியகுளம் கிராம அபிவிருத்தி சங்க பொருளாளர், கோபால் ஆகியோர் நாட்டினர். (14)

---

# மன்னாரில் படையினர் ஆக்கிரமித்துள்ள வீடுகளின் விபரம் திரட்டப் பணிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வீடுகள் தொடர்பான விபரங்கள் தற்போது மன்னார் அரச அதிபரால் திரட்டப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான அறிவித்தல் சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பப்பட்டு அவர்கள் மூலம் விரைவாக இவ்விபரங்கள் திரட்டும் பணி இடம்பெற்று வருகின்றது.

அத்துடன் படையினரால் அழித்தொழிக்கப்பட்ட வீடுகள் பற்றிய விபரங்களுடன் பொதுமக்கள் பாவனையில் உள்ள, இல்லாத வைத்தியசாலைகள் தொடர்பாக விபரங்கள் மற்றும் மக்களின் அடிப்படைத்தேவைகள் தொடர்பான விபரங்களும் திரட்டப்படுகின்றன. (மி)

---

# போராளிகளுக்கு உற்சாகமளிப்பு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு, வள்ளிபுனம் வலய கிராம மக்கள் சிறப்புப் பணியில் ஈடுபட்டுள்ள சோதியா படையணிப் போராளிகளிற்கு உலர் உணவு வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தியுள்ளனர். (19)

---

# தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த பேராளர் சங்கமம்

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் மாதாந்த பேராளர் சங்கமம் கடந்த வியாழனன்று காலை 10.15 மணிக்கு புதுக்குடியிருப்பு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் ஆரம்பமானது. இந்நிகழ்விற்கு புதுக்குடியிருப்புக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் சஞ்சீவன் தலைமை வகித்தார்.


இதன் போது கோட்டத்தின் ஊடாக தேசிய எழுச்சிப் பேரவைக்கான யாப்பு தமிழீழ எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சயால் ஊரகச் செயலர்களிடம் கையளிக்கப்பட்டது. அடுத்து சமகால அரசியல் கருத்துரையை தூயவன் அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா வழங்கியதுடன் யாப்பு அலகு ரீதியாக வாசித்து விரிவான விளக்கத்தையும் கூறினார். (19)

# இணையம்

சி.சிவபாலன்

கணினிகளை ஒன்றுடன் ஒன்று இணைப்பதன் மூலம் அவற்றுக்கிடையே தகவல்களைப் பரிமாறிக்கொள்ள முடியும் என்பதையும், இவ்வாறு கணினிகளை ஒன்றுடன் ஒன்று இணைப்பதற்கான பல்வேறு வலையமைப்புக்கள் குறித்தும் கடந்தவாரம் பார்த்தோம். இவை குறிப்பிட்ட நிறுவனங்கள் தம்மிடமுள்ள கணினிகளை ஒன்றுடன் ஒன்று இணைத்துத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளப் பெரும் பாலும் பயன்படுகின்றன.

இவ்வாறு உலகம் முழுவதிலும் உள்ள கணினிகளை இணைத்துக்கொண்டு தகவல்களைப் பரிமாறிக்கொள்ள முடியுமானால் ... அது பெரும் தகவற் சுரங்கமாக இருக்கும் என்பதில் எவ்வகையிலும் சந்தேகமில்லை. பல்வேறு துறைசார்ந்தோரும் பயன்படுத்தும் தகவல்களையும் இதன் மூலம் பரிமாறிக்கொள்ள முடியும். இவ்வாறான சிந்தனை யின் விளைவாக உருவாக்கப்பட்டதே இன்ரர்நெற் (Internet) ஆகும். அதனை வலையமைப்புகளின் வலை யமைப்பு என்பர். அதாவது கடந்த வாரம் குறிப்பிட்ட வலையமைப்புகளின் இணைப்பு எனலாம். இதனை




உலகளாவிய வலைப்பின்னல் (World web) என்பர். தமிழில் இது இணையம் என அழைக்கப்படுகிறது. எனவே உலகளாவிய ரீதியில் கணினிகளை இணைத்த ஒரு அமைப்பு இணையம் (Internet) என அழைக்கப்படுகின்றது.

இணையத்தின் மூலம் அனைத்து நாடுகளினதும் தகவல் தளங்கள் உலகெங்குமுள்ள பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள்,விஞ்ஞான கூடங்கள் அமைப்புகள், நிறுவனங்கள் வியாபார நிலையங்கள் என்பனவற்றிலுள்ள தகவல்களைப் பெற முடியும். இவை அனைத்தும் இன்று இணையத்தினூடாக இணைக்கப்பட்டுள்ளன. இதனால் இணையம் மூலம் உலகம்இணைக்கப்பட்டிருக்கிறது எனலாம்.

1967 இல் அமெரிக்கப் பாதுகாப்புத்துறை தளங்கள் வசதிக்காக ARPANET என்ற வலைப்பின்னல்ல ஆரம்பித்து அதன் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொண்டன. ARPA என்பது ADVANCED RESEAR CH PROJECTS ADMINISTRATION என்பதன் சுருக்கமாகும். ஆரம்பத்தில் கலிபோர்னியாவிலுள்ள மூன்று கணினி களுடனும் உதா என்னும் இடத்திலுள்ள ஒரு கணினி யுடனும் இணைப்பு ஏற்படுத்தப்பட்டது. பரிசோதனை முயற்சியாக இது மேற்கொள்ளப்பட்டபோதும் அது வெற்றியளித்தது. இதுவே இணையத்தின் ஆரம்பமாகும்.

இணையத்தின் ஆரம்பத்துக்குக் கிடைத்த வெற்றியானது இதனை மேலும் விரிவுபடுத்தத் தூண்டியது. இதன் காரணமாக இவ்விணையம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

முதலாவது பிரிவு இராணுவத்தகவல்களுக்காகவும் இரண்டாவது பிரிவை ஏனைய தகவல்களுக்காகவும் எனப் பயன்படுத்தப்பட்டது. பின்னர் 70களில் பல வலைப்பின்னல்கள் உருவாக்கப்பட்டன. இவற்றில் சில மறைந்தன. ஏனையவை அனைத்தும் இணைந்தே 1994ஆம் ஆண்டளவில் இணையம் உருவாகியது.

இந்த இணையமானது சுயாதீனமான ஓர் அமைப் பாகும். இதனை எவரும் கட்டுப்படுத்துவதில்லை. தனித் தனியே இதில் இணைக்கப்பட்டுள்ள கணினிகளை அவற்றின் சொந்தக்காரர்கள் கட்டுப்படுத்துகின்றபோதிலும் ஒட்டுமொத்தமாக இணையத்தை எவரும் கட்டுப்படுத் துவதில்லை எனினும் இதனை வழிநடத்த "இணையக மும்"(Internet Society) ஒன்று உள்ளது. பல கணினி வல்லுனர்கள் தாமாக இணைந்து இவ் அமைப்பை ஏற்படுத் தியுள்ளனர். இவர்கள் ஒரு கணினியை இணையத்தில் இணைப்பதற்கான வரையறைகளை உருவாக்கியுள்ளனர். அத்துடன் இணைய முகவரிகளை உருவாக்கல் கணினி யின் வளர்ச்சிக்கு ஏற்ப புதிய வரையறைகளை உரு வாக்கல் போன்றவற்றை இவர்கள் மேற்கொண்டு இணைய மூலம் அவற்றை வெளியிடுகின்றனர்.

இணையத்தை நிர்வகிப்பதற்குரிய செலவை இணையத்தில் இணைந்துள்ள அமைப்புகளே பொறுப்பேற்றுக் கொள்கின்றன. பல தொண்டர் நிறுவனங்களின் கொடுப்பனவுகள், அரச மானியங் கள் என்பவற்றின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. இணையத்தைப் பாவிக்க கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லையாயினும் இணைப்பைப் பெறுவதற்கு சந்தாப்பணம் செலுத்த வேண்டும். இவ்வாறு இணைப்பை வழங்கப் பல நாடுகளிலும் பல அமைப்புகள் உள்ளன. இணைப்பை வழங்கு பவர் இன்ரர்நெற் சேவிஸ் புரொவைடர். (Inter net Ser- vice Poovaiders) என அழைக்கப்படுகின்றனர். இவர்களிடம் சந்தாக்கட்டணத்தைச் செலுத்தி இணைய இணைப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

கணினி ஒன்றிற்கு இணைய இணைப்பைப் பெற நான்கு விடயங்கள் தேவையாக உள்ளன.

1.. தொலைபேசி இணைப்பு
2. மொடம் (Modem)
3. தகவல் தொடர்பு மென்பொருள் (Communication Soft ware)
4. இணைய சேவை வழங்கும் நிறுவனத்திடம் அனுமதி

இணைய சேவை வழங்கும் நிறுவனங்கள் பல இயங்குவது குறித்தும் அதனிடம் அனுமதி பெறுவது குறித்தும் முன்னர் பார்த்தோம்.

## தொலைபேசி இணைப்பு


கணினியானது தொலைபேசி இணையப்பினூடாகவே இணையத்துடன் இணைக்கப்படுகின்றது. தொலைபேசி இணைப்பு இல்லாதவிடத்து இணைய சேவையைப் பெற முடியாது. இதற்கு வீட்டுத் தொலைபேசி இணைப்பைப் பயன்படுத்துவதே செலவு குறைந்த வழியாகும். எனினும் செய்மதித் தொலைபேசியூடாகவும் இணைய இணைப்பைப் பெற்றுக் கொள்ள முடியுமாயினும் செலவு அதிகமாகும்.

## மொடம் (Modem)

இது தொலைபேசியூடாக வரும் சைகைகளை கணினிக்கு உரியவாறு மாற்றி வழங்கும். அதேவேளை கணினி வழங்கும் சைகைகளை தொலைபேசிக்கு ஏற்றவாறும் மாற்றியமைக்கிறது. அதாவது தொலைபேசி யூடாக வரும் சைகைகள் தொடர் சைகைகள் (Anolog Signals) ஆகும். இவற்றை கணினிகள் நேரடியாக விளங் கிக் கொள்ளமுடியாது. இதனை மொடம் டிஜிற்றல் சைகை களாக மாற்றி கணினிக்கு வழங்குகிறது. அதே போல கணினி வழங்கும் டிஜிற்றல் சைகைகளை அனலொக் சைகைகளாக தொலைபேசிக்கு வழங்குகிறது. இவை இருவகையாக உள்ளன. ஒன்று கணினிக்கு உள்ளேயே பொருத்தக் கூடிய இன்ரேணல் மொடம். மற்றையது கணினிக்கு வெளியே வைத்திருக்கும் எக்ஸ் ரேணல் மொடம்.

## தகவல் தொடர்பு மென்பொருள்

மொடத்துடன் தொலைபேசி இணைப்பையும் கணினி யையும் இணைத்த பின்னர் தொடர்பாடலை ஏற்படுத்த மென்பொருள் (Software) ஒன்று தேவை இது வின்டோஸ்



மொடம் (Modem)

யுனிக்ஸ், லினக்ஸ் போன்ற ஒப்பரேட்டிங் சிஸ்ரத்துடன் இணைந்தே இருக்கின்றது. எனவே இவற்றைப் பயன் படுத்துவோர் புதிதாக மென்பொருள் எதனையும் கொள் வனவு செய்யத் தேவையில்லை.

இணையத்தின் பயன்பாடானது மிகவும் பாரியதாகும். இப்பொழுது தகவல் பரிமாற்றத்துடன் மட்டும் நின்றுவிடாது அஞ்சல்சேவை, கட்டணம் குறைந்த தொலைபேசிச் சேவை, வர்த்தகம், கல்வி என பல்வேறு வகையில் இதன் சேவை விரிவடைந்து செல்கின்றது. இதனால் இணையத்தைப் பயன்படுத்துவோரின் தொகையும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

---

# மீள்குடியேறிய மக்களுக்கு உணவல்லா பொருள் வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் மீள்குடியமர்ந் துள்ள குடும்பங்களில் ஒரு வயதுக்கு உட்பட்ட பிள்ளை களைக்கொண்ட 160 குடும்பங் களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின ரால் உடுபுடவைகளும், அரிக்கன் லாம்பும் கடந்த 12ஆம் திகதி வழங்கப்பட்டது.

அதுபோன்று இதே உதவி அரச அதிபர் பிரிவில் மீள்குடிய மர்ந்துள்ள கற்பிணித்தாய்மாருக்கு உடுபுடவையும் இரும்பு வாளியும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது. (11)

# குடிநீர் தட்டுப்பாட்டை நிவர்த்திக்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

பளை மகாவித்தியாலயத்தில் குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

எழுநூற்றுக்கு மேற்பட்ட மாண வர்கள் கல்வி கற்கும் இப்பாட சாலையில் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படாத நிலை யில் மாணவர்கள் வேறு இடங் களுக்குச் சென்றே குடிநீரைப் பெற்று வருகின்றனர்.

அத்தோடு இப்பாடசாலைக் குரிய கிணறு புனரமைக்கப்படாத நிலையில் இருந்தமையே இந்த நிலைக்கு காரணமாகும். (அ)

# அடிப்படை வசதிகள் எதுவுமில்லாது இயங்கும் சோரன்பற்று வித்தியாலயம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சோரன்பற்று கணேசா வித்தியாலயம் அடிப் படை வசதிகள் ஏதுமற்ற நிலை யில் தற்போது இயங்கி வரு கின்றது.

இராணுவத்தினரால் இப்பாட சாலையின் நிரந்தர கட்டடங்கள் அதிபர் அலுவலகம், விஞ்ஞான ஆய்வு கூடம், களஞ்சிய அறை என்பன முற்றாக அழிக்கப்பட் டுள்ளன. இராணுவ நடவடிக் கைக்கு முன்னர் 250 மாணவர்கள் கல்விகற்று வந்தனர். தற்போது 130 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒன்பது ஆசிரியர்கள் தேவையான இப்பாடசாலையில் நான்கு ஆசிரியர்களே கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். அதிபர் அலுவலகம் மரத்தின் கீழ் இயங்கி வருகின்றது.

இப்பாடசாலையில் குடிநீர் வசதி மலசல கூட வசதி என்பன முற்றாகவே இல்லாது உள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# சிறிலங்காவில் மதுப்பாவனை அதிகரிப்பால் குற்றச் செயல்கள் பெருகி வருகின்றன

**மதுப்பாவனை சிறிலங்காவில் அதிகரித்துக்கொண்டே வருவதாகவும், இதனால் குற்றச் செயல்கள் பெருகி வருவதும் அவதானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, சிறைச்சாலைகளில் கைதிகள் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே போவதாக கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.**

05 வருடங்களுக்கு முன்னர் 12 ஆயிரம் பேராக இருந்த சிறைக் கைதிகள் கடந்த வருடம் 20 ஆயிரமாக அதிகரித்துள்ளனர். வருடம் தோறும் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 1500 ஆல் அதிகரித்து வருகின்றது. வெலிக்கடைச் சிறையில் மட்டும் தற்போது 2000 கைதிகள் உள்ளனர். அவர்களில் அதிகமானவர்கள் 4ஆம் வகுப்புக்கூடப் படிக்காதவர்கள்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேனஹேரத் ஹோமகம இளைஞர் சனசமூக மன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போது இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டில் ஒவ்வொரு வருடமும் 2000 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. கொலை செய்தவர்களும், கொலை செய்யப்படுபவர்களும் இந்த நாட்டின் பெரும்பான்மை இனமான பௌத்தமத சிங்களவர்களே. இது மிகவும் வருந்தக்கூடிய விடயமாகும். இதனை எப்படித் தடுப்பது? இதற்கு அடிப்படைக் காரணம் மதுப்பழக்கமே. மதுப் பாவனை தெற்கில் அதிகரித்துக் கொண்டே வருகிறது சிறு வயதி லிருந்தே மதுப்பழக்கம் தெற்கில் உருவாகின்றது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இவ்வாறான குற்றச் செயல்கள் மிகவும் அரிது.காரணம் விடுதலைப்புலிகள் மதுபான விற்பனைக்கு இடமளிப்பதில்லை வடக்கு, கிழக்கில் குறைந்தளவே மதுபான விற்பனை நடைபெறுகிறது.

பாலியல் குற்றங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

கண்டி தலதாமாளிகையைச்சூழவுள்ள பிரதேசங்களில் 15 தினங்களுக்கு ஒருமுறை கணவன், மனைவியை வெட்டிக் கொலை செய்கின்றான்.

மதுபானத்தை அருந்தியவர்கள் வாகனங்களைச் செலுத்துவதால் வருடம் ஒன்றுக்கு வீதி விபத்தினால் 3000 பேர் அநியாயமாக உயிரிழக்கின்றனர் என்றார்

## விபத்தில் சிறுவன் காயம்

(ஒட்டுசுட்டான்)

வீதிக்கு குறுக்காக ஓடிய சிறுவன் மோட்டார் சைக்கிளுடன் மோதி காயங்களுக்குள்ளானார்.

நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி பழைய புகையிரத நிலையத்துக்கு அருகில் இவர் விபத்துக்குள்ளானார்.

இச்சிறுவன் வீட்டில் இருந்து தனது அண்ணனுடன் கடைக்கு வந்து திரும்பிய போதே விபத்து ஏற்பட்டது. வின்சன் வினித் என்பவரே காயமடைந்தவராவார். (05)



பாங்கொக் உலக பல்கலைக்கழக மாணவர்கள் சிதம்பரபுரம் ஸ்ரீநாகராசா வித்தியாலய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை பாடசாலை அதிபர் விஸ்வலிங்கத்திடம் கையளிப்பதனை படத்தில் காணலாம்.

படப்பிடிப்பு: ஆ. சுபாஸ்கரன்,
வவுனியா செய்தியாளர்.

# புலமைப் பரிசில் பரீட்சை மாணவருக்கு இலவசப் பாடநூல் கிடைக்கவில்லை

(வவுனியா செய்தியாளர்)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெற உள்ள புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணிதபாட நூல் இதுவரை வழங்கப்படவில்லை.

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கே இவ் இலவச பாடநூல் வழங்கப்படவில்லை என பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் உள்ள ஏனைய கல்வி வலயங்களுக்கும், வன்னிப் பகுதியில் உள்ள சில கல்வி வலயங்களுக்கும் இவ்விலவச கணித பாடநூல் போதியளவில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் வவுனியா தெற்கு கல்வி வலயப் பாடசாலைகளில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கூட கணித பாடநூல் வழங்கப்படவில்லை. இதனால் ஆசிரியர்கள் பெரும் கஷ்டத்தின் மத்தியில் ஆசிரியர் கைநூலைப் பயன்படுத்தியே கற்பிக்கின்றனர்.

கல்வியமைச்சு பாராபட்சமற்ற தன்மையைப் போக்கி அனைத்து மாணவர்களும் பயன்பெறத்தக்க வகையில் பாடநூல்களை அனுப்பிவைக்க வேண்டும் என பெற்றோர் கோருகின்றனர். (10)

# வவு. சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் நடத்திய போட்டி முடிவுகள்

(வவுனியா)

வவுனியா மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கமும், வவுனியா மாவட்ட கல்வித் திணைக்களமும் இணைந்து வவுனியா மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைகளின் தேசிய அணிகளுக்கு இடையேயும், பாடசாலை அணிகளுக்கு இடையேயும் நடாத்திய தமிழ்க்கட்டளைச் சொற்களுடனான வேக அணி நடை, முதலுதவிச் செய்முறைகள், பான்ட் வாத்திய இசைப்போட்டிகள், மனித சிகரங்கள் அமைத்தல், சென். ஜோன்ஸ் குட்டிகள் கலை நிகழ்ச்சி ஆகிய போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

★கலை நிகழ்ச்சி
1ம் இடம் - இறம்பைக்குளம் மகளிர் ம.வி. 2ம் இடம் - நெளுக்குளம் கலைமகள் ம.வி.

★பான்ட் வாத்திய இசைப்போட்டி
1ம் இடம் - இறம்பைக்குளம் மகளிர் ம.வி, 2ம் இடம் - நெளுக்குளம் கலைமகள் ம.வி, 3ம் இடம் - சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

★பாடசாலை அணிகள்

★வேக அணிநடை
1ம் இடம் - இறம்பைக்குளம் மகளிர் ம.வி, 2ம் இடம் - சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, 3ம் இடம் - நெளுக்குளம் கலைமகள் ம.வி.

★பான்ட் வாத்திய இசைப்போட்டி
1ம் இடம் - சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, 2ம் இடம் - நெளுக்குளம் கலைமகள் ம.வி, 3ம் இடம் - வவுனியா தமிழ் மத்திய ம.வி.

★முதலுதவி செய்முறைகள்
1ம் இடம் - வவுனியா. சீ.சீ. ரி. எம்.பாடசாலை, 2ம் இடம் - நெளுக்குளம் கலைமகள் ம.வி. 3ம் இடம் - சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

★மனித சிகரம் அமைத்தல்.
1ம் இடம் - இறம்பைக்குளம் மகளிர் ம.வி, 2ம் இடம் - நெளுக்குளம் கலைமகள் ம.வி., 3ம் இடம் - சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

★தேசிய அணிகள்.

★வேக அணிநடை.
1ம் இடம் -முன்பள்ளி ஆசிரியர்கள், 2ம் இடம் - தேசிய கல்வியியற் கல்லூரி அணி-I, 3ம் இடம் - தேசிய கல்வியியற் கல்லூரி அணி-II.

★பான்ட் வாத்திய இசைப் போட்டி
1ம் இடம் - முன்பள்ளி ஆசிரியர்கள், 2ம் இடம் - தேசிய கல்வியியற் கல்லூரி அணி-II, 3ம் இடம் - தேசிய கல்வியியற் கல்லூரி அணி-I.

★முதலுதவி செய்முறைகள்
1ம் இடம் - முன்பள்ளி ஆசிரியர்கள், 2ம் இடம் - தேசிய கல்வியியற் கல்லூரி அணி-I, 3ம் இடம் - தேசிய கல்வியியற் கல்லூரி அணி-II.

★மனித சிகரம் அமைத்தல்.
1ம் இடம் - தேசிய கல்வியியற் கல்லூரி அணி-I. 2ம் இடம் - தேசிய கல்வியியற் கல்லூரி அணி-II. 3ம் இடம் - முன்பள்ளி ஆசிரியர்கள்.

★சாம்பியன் அணி
1ம் இடம் - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, 2ம் இடம் - சைவப்பிரகாச மகளிர் கல்லூரி. 3ம் இடம் - இறம்பைக்குளம் மகளிர் ம.வி. (10)

# காரைநகர் செல்லும் பொதுமக்களை பதிவு செய்ய கடற்படை வற்புறுத்து

(கொழும்பு)

யாழ்ப்பாணம் காரைநகர் பகுதிக்குச் செல்லும் பொதுமக்கள் மீது கடற்படையினர் கெடுபிடிகளை பிரயோகித்து வருவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அப்பகுதிக்குச் செல்லும் பொதுமக்கள் அங்குள்ள சோதனைச் சாவடியில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வடமராட்சி பல்லப்பை வீதியை உடனடியாக திறந்து மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்க வேண்டும் என்றும் இல்லாதுவிட்டால் வெகுசனப் போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் அந்தப் பகுதி வெகுசன அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

## திறனாய்வுப் போட்டியில் ஒட்டுசுட்டான் ம. வி. முதலிடம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கோட்ட மட்டத்திலான பாடசாலைகளுக்கிடையே திறனாய்வு விளையாட்டுப் போட்டி ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

கடந்த 12,13ஆம் திகதிகளில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான திறனாய்வுப் போட்டியில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும் மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை இரண்டாம் இடத்தையும் முத்துஐயன்கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை மூன்றாம் இடத்தையும் பெற்றன.

இதில் 11பாடசாலைகள் பங்குபற்றின. சிறப்பு பிரதிநிதியாக ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி சி.ஜெயபாலன் கலந்து கொண்டார். (05)

## மாணவர் கௌரவிப்பும் நூல் வெளியீட்டு நிகழ்வும்

(வட்டக்கச்சி)

கிளிநொச்சி மாவட்ட திருநெறிக்கழகத்தினால் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவமும் கிளிநொச்சி மகாவித்தியாலய ஆசிரியர் செ. சிவஞானம் உருவாக்கத்தில் ஆக்கப்பெற்ற "சமயம் வளர்ந்த சான்றோர்" என்ற நூல் வெளியீட்டு விழாவும் நேற்று முன்தினம் பி.ப. 2.00 மணிக்கு வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

பங்கையற்செல்வன் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் சமயம் வளர்த்த சான்றோர் என்ற நூலினை வெளியிட்டு வைத்தார். முதற்பிரதியை உதவிக் கல்விப் பணிப்பாளர் முருகவேல் பெற்றுக்கொண்டார்.

மதிப்பீட்டு உரையினை கரைச்சிப் பிரதேச சபை உள்ளூராட்சி சேவையாளர் செல்வி மணிமேகலை குமாரசாமியும், வலயக் கல்விப் பணிமனை தமிழ் பாட ஆலோசகர் கணேசலிங்கமும் ஆற்றினார்கள்.

தொடர்ந்து சைவசமயப் போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கான தங்கப் பதக்கமும் நினைவுப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. பரீட்சையில் தரம்13இல் அதிக புள்ளிகளைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தை வட்டக்கச்சி மகா வித்தியாலய மாணவி வேணி தங்கராசாவுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம் வழங்கிக் கௌரவித்தார்.

கூடிய புள்ளிகளைப் பெற்ற த. வினோதினி பிரமந்தனாறு ம/வி.கா.பிரியதர்சினி திருவையாறு ம/வி, கா. சுயா தருமபுரம் ம/வி, பா. சயந்தினி வட்டக்கச்சி ம/வி

தரம் 13 மாணவர்களுக்கும் சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது. தரம் 12இல் வி. கருணா வட்டக்கச்சி ம/வி, பா. கோமளா வட்டக்கச்சி ம/வி, கு. பிரசாந்தி வட்டக்கச்சி ம/வி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (12)

## கட்டுமரம் வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் இராணுவக்கட்டுப்பாடு அற்ற பிரதேசத்தில் இயங்குகின்ற ஒன்பது கடற்தொழிலாளர் சங்கங்களுக்கும் U.N.D.P. நிறுவனம் சங்கமொன்றிற்கு 3 கட்டுமரம் வீதம் 27 கட்டுமரங்களை வழங்கியுள்ளது. சங்கங்கள் தமது அங்கத்தவர்களுக்கு குலுக்கல் முறையில் தெரிவு செய்து சுழற்சிகடன் முறையில் இவற்றை வழங்கியுள்ளன. (11)

## ஆண்டுற்சவப் பொங்கல் விழா

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவப் பொங்கல் விழா இன்று (செவ்வாய்) நடைபெறவுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ் ஆலயத்தின் ஆண்டுற்சவப் பொங்கல் விழா பதினைந்து வருடங்களுக்குப் பின் இவ் வருடம் மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது. பண்டைய மரபுப் படி கடந்த செவ்வாய்க்கிழமை விளக்கு வைக்கும் நிகழ்வு நடைபெற்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அடுத்து வழமை போல் இவ்வருடம் பண்டம் எடுக்கும் நிகழ்வு மீசாலை புத்தூர் சந்தியில் ஆரம்பமாகி ஆனையிறவு, பரந்தன், கண்டாவளை ஊடாக ஆலயத்தை வந்தடையும். (14,15)



சிந்தனைக்கு

உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும் அவர்களின் உடைமை நாசத்திற்கும், சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவெறி பிடித்த தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 18-03-2003

## மாற்றங்கள் அவசியம்!

விடுதலைப் புலிகளுக்கும்-சிறிலங்கா அரசிற்கும் இடையிலான போர்நிறுத்த உடன்பாட்டில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது என்ற சமாதான முயற்சிகளின் ஏற்பாட்டாளர்களான நோர்வே அரசின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கதாகும். ஏனெனில் போர்நிறுத்த உடன்பாட்டில் சில பகுதிகள் மாற்றம் செய்யப்பட வேண்டியும் சில பகுதிகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவையாகியுமுள்ளன.

விடுதலைப்புலிகளின் வர்த்தகக் கப்பல் ஒன்றை சர்வதேசக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படை தாக்கி மூழ்கடித்தமையானது மீண்டும் மோதல் தொடங்கிவிடுமோ என்ற அபாயகரமான கட்டத்திற்கு நிலையை இட்டுச் சென்றதென்பதை எவரும் அவதானிக்காமல் இருந்திருக்க முடியாது. விடுதலைப் புலிகளின் தலைமை, பொறுமைகாத்ததன் விளைவாகவே மீண்டும் யுத்தம் என்ற நிலை தவிர்க்கப்பட்டது என்பது வெளிப்படையானது.

இதேவேளை, மீண்டும் இதுபோன்றதொரு நிலை ஏற்படுமாயின் - விடுதலைப் புலிகள் தற்போது கடைப்பிடித்தது போன்றதொரு நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பார்களா? கடைப்பிடிக்கத்தான் முடியுமா? என்பது கேள்விக்குரியதொன்றே. இது குறித்து விடுதலைப் புலிகளும் தமது எச்சரிக்கையை விடுக்கத் தவறவுமில்லை.

ஆகையால், யுத்தநிறுத்த உடன்பாட்டில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதென்பது அவசியமானதொன்றாகும். குறிப்பாக, கடற்பரப்பில் இடம்பெறும் சம்பவங்கள் இருதரப்பினர் இடையேயும் முறுகல் நிலையைத் தோற்றுவித்து வருவதனால் இவ் விவகாரத்தில் உடன்பாடு ஒன்றை எட்டுதல் கட்டாய தேவை ஆகியுள்ளது.

இது ஒருபுறமிருக்க போர்நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் என்ற விடயத்திலும் சமாதான ஏற்பாட்டாளர்கள் தீவிர கவனம் செலுத்துதல் அவசியமானதொன்றாகும். ஏனெனில் எத்தகைய விதிகளையும்/சரத்துக்களைக் கொண்டதுமாகப் போர்நிறுத்த உடன்பாடு இருப்பினும் அதனை அமுல்படுத்துவதிலும் அதற்கு உடன்பட்டு நடத்தல் என்பதிலுமே அதன் வெற்றி தங்கியுள்ளது.

இம்முறை கப்பல் தாக்கப்பட்ட விவகாரமானது-சிறிலங்கா அரசாங்கத்தரப்பு கூறுவது போன்று அது விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பலாக இருந்தாலும் சரி, அடுத்ததாக சிறிலங்காவின் கடல் எல்லைக்குள் இருந்தாலும் சரி அக்கப்பலைத் தாக்கி மூழ்கடித்ததென்பது உடன்பாட்டு மீறலே ஆகும். அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறான செயற்பாடே ஆகும்.

அதாவது, இரு தரப்பினரும் உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டிருக்கையில், அதனைக் கண்காணிப்பதற்கென ஒரு குழுவினர் இருக்கையில், ஏதோ ஒரு காரணத்தைக்கூறி உடன்பாட்டிற்கு மாறாகச் செயற்படுதல் என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. இது உடன்பாட்டையே அர்த்தமற்றதொன்றாக்கி விடும். இத்தகையதொரு நிலையே விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தில் நிகழ்ந்துள்ளது. அதாவது, இரு தரப்பினருக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்பாட்டின் 1.3வது சரத்தை சிறிலங்கா அரசு முற்றிலுமாகவே மீறியுள்ளது. இச்சரத்தானது, விடுதலைப்புலிகள் இயக்கம் மீது படையினரின் வலிந்து தாக்குதல் நடவடிக்கைகளைத் தடை செய்கின்றது.

இது ஒருபுறமிருக்க, விடுதலைப் புலிகளின் கப்பல் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறான வகையில் நடமாடுகின்றது எனச் சிறிலங்காக் கடற்படை கருதியிருப்பின், அதனைத் தடுத்து நிறுத்தியதுடன் கடற்படை தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டிருத்தல் வேண்டும். அதன் பின்னர் கண்காணிப்புக் குழுவிடம் தொடர்பு கொண்டு அவர்களை அழைத்திருத்தல் வேண்டும். ஆனால், சிறிலங்காக் கடற்படையோ தான்தோன்றித்தனமாக - தமக்கும் உடன்பாட்டிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை, பொறுப்பும் இல்லை என்ற ரீதியில் புலிகளின் கப்பலைத் தாக்கி மூழ்கடித்துள்ளது. கண்காணிப்புக் குழுவினர் இது குறித்துத் தெரிவித்த ஒரு சில ஆலோசனைகளையும் அவர்கள் கேட்கவில்லை.

ஆகையினால், நோர்வே அரசு தன் முயற்சியினால் யுத்த நிறுத்த உடன்பாட்டில் சில விடயங்களை இணைத்து அதனை விரிவாக்கம் செய்வதினால் மட்டும் யுத்த நிறுத்த மீறல்களும், முறுகல் நிலையும் முடிவுக்கு வந்துவிடப்போவதில்லை. ஆகையினால், யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் யுத்த நிறுத்தத்தைத் தீவிரமாக அமுல் செய்வதற்கான சூழ்நிலையும் உருவாகுதல் வேண்டும். யுத்தநிறுத்த மீறல் தொடர்பான விடயங்களையும் அவர்களே கையாள வேண்டும். அவ்வாறு இல்லாதுவிடில் உடன்பாட்டை விரிவாக்கம் செய்வதினால் பயன் ஏதும் ஏற்பட்டு விடமாட்டாது.

# அரசியல் கைதிகளின் வழக்குகளை மாற்ற அரசாங்கம் தீவிரமாக ஆராய்கிறது

## சட்டமா அதிபர் தகவல்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு மாற்றுவதன் சாத்தியம் பற்றி சிறிலங்கா அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

சட்டமா அதிபர் கமலசபேசன் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்; இது குறித்ததிட்டம் ஒன்றினை சட்டமா அதிபர் திணைக்களம் ஏற்கனவே தயாரித்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழும், அவசரகாலச் சட்டத்தின் கீழுமாகக் கைது செய்யப்பட்ட நூற்றுக்கு மேற்பட்டோர் தற்போது களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு - கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இதேவேளை, இக்கைதிகள் தங்களது வழக்குகள் உடனடியாக விசாரிக்கப்பட வேண்டும் அல்லது தாம் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்ததையடுத்தே அரசு இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

# உயர்தரத்தில் சித்திபெற்ற இளைஞர்களுக்கு வேலை வழங்க 100 கோடி ரூபா நிதியுதவி

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் சித்தியெய்தி வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நூறு கோடி ரூபாவை வழங்கவுள்ளது.

பிரதம மந்திரியின் ஆலோசகர் பாஸ்கரலிங்கம் தலைமையிலான குழுவினர் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளுடன் இவ் விடயம் தொடர்பாக நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்தே இந் நிதியுதவி கிடைக்கவுள்ளது.

வேலையற்றவர்களுக்கு பயிற்சிகளை வழங்கவும் சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவுமென இந்நிதி பயன்படுத்தப்படும்.

# சமாதான நீதவான்களாகத் தோட்ட அதிகாரிகள்!

தோட்டத் தொழிலாளர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக, பெருந்தோட்டத்துறையில் உள்ள பிரதான தோட்ட அதிகாரிகளை சமாதான நீதவான்களாக நியமிக்க வேண்டும் என்ற அமைச்சர் சந்திரசேகரனின் கோரிக்கைக்கு, நீதி அமைச்சர் லொக்கு பண்டார சம்மதம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் சந்திரசேகரனின் அந்தரங்கச் செயலாளரும், அமைச்சின் ஆலோசகருமான அ.அரவிந்த குமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆலயங்களின் தலைமைக் குருக்களையும் சமாதான நீதவான்களாக நியமிக்க வேண்டுமென்ற அமைச்சர் சந்திரசேகரனின் கோரிக்கைக்கும் நீதி அமைச்சரவை அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டு அவ்வங்கீகாரம் கிடைத்தவுடன் உரியவர்களுக்கான பதவிகள் வழங்கப்படவுள்ளன.

## - பொருட்கள் சேவைகள் சட்டமூலம் -

# உச்ச நீதிமன்றத் தீர்ப்பை சனாதிபதிக்கு அனுப்ப நீதியரசர் நடவடிக்கை

(கொழும்பு)

மத்திய கிழக்கில் யுத்தம் வெடித்தால் ஒழுங்காக உணவு விநியோகம் மேற்கொள்வதற்காக அரசாங்கம் கொண்டுவரவுள்ள பொருட்கள் சேவைகளை நிர்வகிப்பதும் கட்டுப்படுத்துவதும் தொடர்பான சட்ட மூலம் அரசியல் யாப்பிற்கு இயையானதா என்பது குறித்து உச்ச நீதிமன்றம் ஆராய்ந்து தீர்ப்பு வழங்கவுள்ளது.

மேற்படி சட்ட மூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு இது அரசியல் யாப்புக்கு முரணானதா? இல்லையா? என ஆராய்ந்து அறிவிக்குமாறு சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க உச்சநீதிமன்றத்திற்கு பணிப்புரை வழங்கியிருந்தார்.

அவசரகாரணம் கருதி மேற்படி சட்டமூலம் குறித்து பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, யாப்பா அசோக டி சில்வா அடங்கலான உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழு ஆராய்ந்துள்ளது.

சட்டமூலத்திலுள்ள சில சரத்துக்கள் யாப்புக்கு முரணாக இருப்பதாகத் தெரிவித்துள்ள நீதிபதிகள் வழக்குத் தொடர்பான தீர்ப்பு சனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் அறிவிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தொண்டர் ஆசிரியர்களை ஒன்றுகூடக் கோரிக்கை

வட மாகாணத் தொண்டர் ஆசிரியர் ஒன்றியம், தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. மகாசிவம் அவர்களுடன் நேற்று நடாத்திய கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் தொடர்பாக அவசரமாக கலந்துரையாட வேண்டியிருப்பதால் வட மாகாணத்தின் சகல கல்வி வலயங்களையும் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களையும் நாளை பின்வரும் ஒழுங்குமுறைக்கு அமைய ஒன்று கூடுமாறு வட மாகாண தொண்டர் ஆசிரியர் சங்க ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் - புதிய உயர் கல்லூரி, ஆரியகுளச்சந்தி, காலை 10.00 மணி: துணுக்காய், மாந்தை கிழக்குக் கோட்டம் - மல்லாவி மத்திய கல்லூரி, காலை 9 மணி: ஒட்டுசுட்டான் கோட்டம் - கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, மாலை 2 மணி: முல்லை வலயம் - சுப்பிரமணிய வித்தியாலயம், மு.ப 12 மணி: கிளிநொச்சி வலயம் - கிளி. மத்திய கல்லூரி, மாலை 2 மணி: வவுனியா வலயம் - கனகராயன்குளம் ம.வி. மாலை 2.00 மணி.

# 'பொடோ' சட்டப் பிரிவுக்கெதிரான வை.கோ.வின் மனு 25-ல் விசாரணை

## விடுவிக்கக் கோரும் மனு ஒத்திவைப்பு

(சென்னை)

"பொடோ" சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ உட்பட அவரது கட்சியைச் சேர்ந்த 08 பேரும் பூந்த மல்லியிலுள்ள 'பொடோ' நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

தங்களை விடுவிக்க வேண்டும் என, வை.கோவைத் தவிர மற்றவர்கள் தாக்கல் செய்த மனுக்கள் மீதான தீர்ப்பை நீதிபதி ராஜேந்திரன் நிறுத்தியுள்ளார்.

'பொடோ' சட்டத்தின் 21 ஆவது பிரிவு குறித்து உச்ச நீதிமன்றத்தில் வை.கோ தாக்கல் செய்த மனு இம்மாதம் 25 ஆம் திகதி விசாரணைக்கு வருவதால், அதுவரை தமது தீர்ப்பை நிறுத்தி வைப்பதாக அவர் கூறியுள்ளார். வை.கோ மற்றும் 08 பேரின் தடுப்புக் காவலை அடுத்த மாதம் 07 ஆம் திகதி வரை நீடிக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# வளைகுடாவில் போர் மூளும் அபாயம் அதிகரிப்பு

# இரண்டரை லட்சம் துருப்புக்கள் ஆயத்த நிலையில்

(பாக்தாத்)

வளைகுடாவில் போர் மூளும் அபாயம் தீவிரமடைந்துள்ளது. ஈராக்கை இலக்குவைத்து இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க பிரித்தானிய துருப்புக்கள் தாக்குதல் ஆரம் பிப்பதற்கான தயார் நிலையில் வளை குடாவில் நிறுத்தப்பட்டு உத்தரவிற்காகக் காத்திருக் கின்றன.

ஈராக்கிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களிலிருந்து தத்தமது நாட்டவர்களை அந்தந்த நாடுகள் மீள அழைத்துக் கொண்டிருக் கின்றன. ஆயுத கண்காணிப்பாளர் களை ஈராக்கை விட்டு வெளியே றுமாறு அமெரிக்க சனாதிபதி புஷ் கேட்டுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பிரிட்டன், ஸ்பெயின் நாடுகளால் கொண்டுவரப்பட விருந்த இரண் டாவது வரைபு இறுதி நேரத்தில் தவிர்க்கப்பட்டுள்ளது.

ஈராக் மீதான எந்த இராணுவ நடவடிக்கையையும் தாம் ஆதரிக்கமாட்டோம் என ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையை பெற்றுள்ள பிரான்சும், ரஷ்யாவும் கூறி யுள்ளன. ஜேர்மன் அதிபரும் ஈராக் மீதான தாக்குதலை ஆதரிக்கப் போவதில்லை எனக் கூறியுள்ளார்.

இதேவேளை ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் தமது நாட்டு குடிமக்களை யுத்தம் ஒன்றிற்கு முகம் கொடுக்கத் தயார் படுத்தியுள்ளார். ஈராக்குடன் யுத்தம் புரிந்து முன்னர் தந்தை தோற்றார். தற்போது மகன் தோல்வியடையப் போகிறார் என்று கூறியுள்ளார். ஈராக் மீதான யுத்தத்திற்கு ஐ.நா. அனுமதி வழங்காது விட்டால் ஐ.நா.வின் ஒழுங்குகளை மாற்றியமைக்க நேரிடும் என்றுஅமெரிக்க சனாதிபதி புஷ் கூறியுள்ளார்.

இதேவேளையில், ஈராக்கிய மக்கள் யுத்தம் மூளலாம் என்று எதிர்பார்ப்பதன் காரணமாக உணவு மற்றும் குடிநீர் என்பனவற்றைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளதாக வும் உண வுப்பொருட்களுக் குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வும் தெரிய வருகிறது.



ஈராக்கில் போர் அபாயத்தை அடுத்து உணவு, குடிநீர், கொள்வனவு செய்யும் மக்கள்

## ஊரக வளர்ச்சிப் பணியினரால் 75 வறிய குடும்பங்களுக்கு வீடுகள் கையளிக்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

ஊரக வளர்ச்சிப் பணியினரால் துறைசார் நிறுவனங்களின் அனு சரணையுடன் சாந்தபுரம் கிரா மத்தில் வறுமையிலும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங் களுக்கு சீமெந்தினால் புதிதாகக் கட்டப்பட்ட 75 வீடுகள் கையளிக் கப்படவுள்ளன.

மேற்படி நிகழ்வு நாளை பி.ப. 3.00 மணிக்கு சாந்தபுரம் கிராமத்தில் இடம்பெறவுள்ளது.

முற்று முழுதாக சீமெந்தினால் அமைக்கப்பட்டு அஸ்பஸ்ரோஸ் கூரைத்தகடு பொருத்தப்பட்டு தனித்தனி மலசல கூடங்களுடன் ஒரு லட்சத்துதொண்ணூற்றி ஐயாயிரம் ரூபா பெறுமதியுடைய கட்டடங்களும், அரை ஏக்கர் நிலப் பரப்புக்கொண்ட 75 வீடு கள் மேற்படிமக்களுக்கு நிரந்தரமாகக் கையளிக்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

## மக்கள் சுகாதாரம்

## நடமாடும் மருத்துவ சிகிச்சை தொடர்பான கலந்துரையாடல்

(அலுவலகச் செய்தியாளர்)

எதிர்வரும் 4,5ஆம் திகதிகளில் சுகாதார அமைச்சினால் கிளி. மாவட்டத்தில் நடாத்தப்பெறவுள்ள "மக்கள் சுகாதாரம்" நடமாடும் மருத்துவ சிகிச்சை தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி அரச அதிபர் தி. இராசநாயகம் அவர் கள் தலைமையில் கிளி. அரச செயலக மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இக்கலந்துரையாடலில் துறைசார்ந்த திணைக்களங்கள், நிறுவனங்களை கலந்து கொள்ளு மாறு கிளி. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்திய மூர்த்தி அவர்கள் தெரிவித்துள் ளார்.

இம்மருத்துவ சிகிச்சை எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதி களில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் மருத்துவ சிகிச்சையில் பல்வேறுபட்ட நோய்களுக்கும் விசேட வைத்திய நிபுணர்கள் கலந்து சிகிச்சை மேற்கொள்ளவுள்ளனரெனவும், மேற்படி மருத்துவ சிகிச்சையில் நோயாளர்களை கலந்து சிகிச்சை பெறும் வண்ணம் அவர் கேட்டுள் ளார்.

(சோ)

### ஜப்பான்...

அந்தக் குறிப்பிட்ட அமர்வுக்கு சிறப்புத்தூதுவர் தலைமை தாங்கவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ், வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் இப்படியான பேச்சுக்களில் ஒரு முக்கிய பொறுப்பில் கலந்துகொள்வது இதுவே முதல் தடவை. இதன் மூலம் இவ்விடயத்தில் ஜப்பானின் பங்களிப்பின் முக்கியத்துவம் வெளிப்படுகின்றது என்றார்.

### தியாகி...

முதல் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி வரையான நாட்களில் சிரமதா னங்கள், கருத்தரங்குகள், உண் ணாவிரதங்கள் என்பன கிராம வாரியாக நடைபெறும்.

இறுதி மூன்று நாட்களான ஏப்ரல் 17, 18, 19ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் உண்ணா விரதம் ஆரம்பமாகும். அத்துடன் இறுதி நாளன்று மாலை நினைவுக் கூட்டங்கள் நடைபெறும். அன் றையதினம் நாட்டுப்பற்றாளர் தினமாகவும் அனுஷ்டிக்கப்பட வுள்ளது.

### சந்திப்பு...

ஜப்பான் விசேட தூதுவர் யசுசி அகாஷியும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இதற்கு முன்னதாக நேற்று அரச தரப்பு தலைமைப் பேச்சாளர் அமைச்சர் பீரிஸ் அவர்களுடனும் யசுசி அகாஷி கலந்துரையாடல் ஒன்றை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இரு தரப்பு பிரதிநிதிகளுக்கும் ஜப்பானிய விசேட தூதுவர் இன்று மதிபம் விருந்து ஒன்றையும் வைக்க வுள்ளார்.

### புலிகளின்...

விவாதித்து பயனுள்ள முடிவுகளை எடுக்க முடியும். அதாவது அந்த நாட்களில் மனித உரிமை விவகாரங்கள் அதிகார பகிர்வு மற்றும் அதிகாரப் பரவலில் பொருளாதாரக் கூறுகள் குறித்து விவாதிக்க இருக்கிறோம்.

இதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தை திருத்தி அமைப் பதற்கான தேவை இருப்பதாக நான் கருதவில்லை. சிறந்த முறையில் மோதல் சூழல் தவிர்ப்பு குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் விரிவாக கூறப்பட்டுள்ளது. கடல் நடவடிக்கை குறித்து இருதரப் புக்கும் இடையில் தெளிவான ஒப்பந்தங்கள் உருவாகலாம். இது போன்ற சிக்கல்களை எதிர்காலத்தில் எழாமல் தவிர்ப்பது பற்றி முடிவெடுக்கலாம். அதேசம யம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வதோ திருத்தி அமைப்பதோ சரியாக இருக்காது என்றார்.

இதேவேளை. இந்தப் பேச்சுவார்த்தையில் போர்நிறுத்த உடன்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்படவுள்ளது என நோர்வே துணை வெளியுறவுத் துறை அமைச்சர் விதார் கெல்ஹேசன் தெரிவித்துள்ளார்.

அரசியல் விடயங்களில் அதிக கவனம் செலுத்த அரசியல் ரீதியான பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும். களநிலவரங்களை சமாளிக்கக்கூடியவாறு இது அமையவேண்டும். மோதல் ஏற்படும்போது தவிர்க்கும் விதிமுறைகள் தயாரிக்க வேண்டியிருப்பதால் அது பற்றியும் விரிவாக ஆராயப்படும். நெருக்கடி நிலை, அவசர நிலை ஏற்படுமானால் இது முக்கிய அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு இடையூறாக அமையலாம். போர்நிறுத்த உடன்படிக்கை மீறப்படும் போது சம்பந்தப்பட்ட தரப்பு அந்தக் குறைபாடுகளை நீக்கும் பொருட்டு அடித்தளங்கள் இடப்பட வேண்டும். இதன் மூலம் தான் உதவி வழங்கும் நாடுகள் உட்பட சர்வதேச சமூகம் மீது நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும் என விதார் கெல்ஹேசன் மேலும் தெரிவித்துள்ளார்.

இன்றைய பேச்சுவார்த்தைகள் தமிழீழ நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு ஹைக்கோன் நகரில் உள்ள பிறின்ஸ் விடுதியில் நடைபெறவுள்ளது.

### திருமலைக்...

கடற்படையினர் சிறிலங்கா பொலி சாரிடம் ஒப்படைத் ததையடுத்து இவர்கள் திரு கோணமலை நீதி பதி முன் நிறுத்தப்பட்டனர்.

நீதிபதி இம்மூவரையும் பிணையில் விடுவித்துள்ளதாக இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

### கடற்படை....

கருத்துக்கள் குறிப்பிடப்பட் டுள்ளன.

இந்தச் சம்பவம் நடைபெற்றபோது தமக்கு சமாதான செயலகத்தில் இருந்து தகவல் கிடைத்ததாகவும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் இது தொடர்பாக சிறிலங்கா படையினரை நேரடியாகத் தொடர்பு கொண்ட தாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்தத் தகவல் பரிமாற்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சிறிலங்கா படையினரின் கலமும் விடுதலைப் புலிகளின் கப்பலும் மோதலில் ஈடுபட ஆரம்பித்து விட்டதாகவும், இதனால் அந்த சம்பவம் நடை பெற்றுள்ளதாக கண்காணிப்புக் குழு அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக, சிறிலங்காப் படையினரின் ஒளிப்பதிவு நாடாவை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், இது ஒரு தரப்பில் இருந்தே கிடைக்கப்பெற்றது என்றும் அவ் அறிக்கை தெரிவித்துள்ளது.

சர்வதேச கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான ஒரு கப்பல் சென்றதாகவும், ஆனால், அது விடுதலைப் புலிகளின் கப்பலா என்று தங்களுக்குத் தெரியாது என்று விசாரணையின்போது தாக்குதல் நடத்திய கயூரா கப்பலின் கடற்படையினர் தெரிவித்ததாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித் துள்ளது.

ஆனால், இக்கூற்று பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக் கையில் இருந்து மாறுபட்டதாக அமைந்துள்ளது என்று அக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு அறிக்கையின்படி சந்தேகத்துக் கிடமான கப்பல் விடுதலைப் புலிகளின் கப்பலே என்று சிறிலங்கா கடற்படையினர் தெரிந்து வைத்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு சர்வதேச சட்டத்துக்கு விளக்கம் அளிக்கும் அதிகாரம் இல்லை எனவும், எனினும் இச்சம்பவம் குறித்து உரிய நேரத்தில் தங்களுக்குத் தெரியப் படுத்தியிருந்தால் இச்சம்ப வத்தைத் தவிர்த்திருக்க முடியும் என்றும் போர் நிறுத்தக் கண்கா ணிப்புக்குழுவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

மேலும், இரு பகுதியினரும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடக்க வேண்டும். மோதலைத் தவிர்க்க வேண்டும். தாக்குதல் நடவடிக்கையைத் தவிர்க்க வேண்டும். போர் நிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் குறித்து கண்காணிப்புக்குழு கண்கா ணிக்கும் என்றும் அந்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

சமஷ்டி: உலகளாவிய அநுபவம்

மு. திருநாவுக்கரசு பேசுகிறார்

19.03.2003 - புதன்
பிற்பகல் 3.00 மணிக்கு

இங்லிஷ் வேர்க்ஷொப் முற்றத்தில்

நிச்சாட்டகமம்; வின்சன் வீதி;
கோவிந்தன் கடைச்சந்தி;
கிளிநொச்சி.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.